Aparajitha

அக்டோபர்

2017

24

தளிர்த் திறன் திட்டம்

# வெற்றியின் விதைகள்





பொருள் பக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| வணக்கம்! | 2 |
| பதிவுகள் | 3 |
| சுவடுகள் | 6 |
| எதிரொலிகள் | 8 |



அபராஜிதா அறக்கட்டளை
5அ, வி.பி. இரத்தினசாமி சாலை
பீபிகுளம்
மதுரை 625 002
www.aparajitha.org
0452-4375252
info@aparajitha.org


செய்திமடல்
தனிச்சுற்றுக்கு மட்டும்

வாழ்க்கைத் திறன்களின் வழியாக நிலைமாற்றம்

# வணக்கம்!

சிந்தையைக் கவர்ந்த ஒன்றைச் செயற்படுத்த விரும்புவது எளிது. ஆனால், அதனைச் செயற்படுத்துவது பலவேளைகளில் எளிதாக இருப்பதில்லை. செயலாக்கத்திற்குத் தேவையான இடம், நேரம், பொருள், உழைப்பு, ஒத்துழைப்பு என்னும் பல்வேறு கூறுகளில் ஏதேனும் ஒன்றில் இடர் ஏற்பட்டாலும் அச்செயலாக்கம் தடுமாறத் தொடங்கிவிடும். ஆனால், அதனைச் செயலாக்கியே தீர்வது என விரும்புகிறவர்கள், அத்தடைகளைத் தகர்க்கிறார்கள். எண்ணியதை முடிக்கிறார்கள்.

அவ்வாறுதான் குஜராத் மாநிலத்தில் - 2011ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படத் தொடங்கி தற்பொழுது 2349 பள்ளிகளில் கற்பிக்கப்படும் - தளிர்த் திறன் திட்டத்தின் குஜராத்தி வடிவமான டிம் டிம் தாராவை தத்தம் பள்ளியில் செயற்படுத்துவதில் ஏற்பட்ட தடைகளையும் அதனை அவர்கள் தகர்த்தவிதத்தையும் இத்திட்டத்தால் அப்பள்ளி மாணவர்களிடம் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் பள்ளித் தலைமையாசிரியர் ஒருவரும் வகுப்பாசிரியர் ஒருவரும் இவ்விதழில் பதிந்திருக்கிறார்கள். ஒரு திரைப்பாடம் மாணவர் ஒருவரை செயலாக்குநராக மாற்றிய நிகழ்வையும் மற்றொரு பள்ளியில் மாணவர்களிடையே ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் மேலும் இருவர் பகிர்ந்திருக்கிறார்கள்.

படியுங்கள் . . . உங்களின் கருத்துகளைப் பகிருங்கள் . . .

தொடர்ந்து உங்களின் ஆதரவையும் ஆலோசனையையும் எதிர்நோக்கும்,

*அரிஅரவேலன்*
*மேலாளர்*



*தளிர்த் திறன் திட்டமானது வாழ்க்கைத்திறன் கல்வியை ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்குகிறது. உலக நலவாழ்வு அமைப்பு பட்டியலிட்டு உள்ள பத்து வாழ்க்கைத் திறன்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்வுக்கல்வி வடிவில் உருவாக்கப்பட்ட பாடங்கள் தொடக்கப்பள்ளி வகுப்புகளுக்கு ஆசிரியர் கையேட்டின் வழியாகவும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளுக்கு காணொளி வழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. பொறுப்புடைய மாணவர்களை உருவாக்கும் நோக்குடைய இத்திட்டம் வெள்ளோட்டமாக 2008-09 ஆம் ஆண்டில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளில் தொடக்கப்பட்டு, 2009-10 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையால் தமிழகத்தில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் விரிவாக்கப்பட்டது. பின்னர் விருப்பம் உள்ள தொடக்கப்பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் இப்பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாடு, குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தர பிரதேசம், பஞ்சாப், அரியானா ஆகிய ஏழு மாநிலங்களிலும் புதுச்சேரி ஒன்றியப் பரவிலும் செயலாக்கம் செய்யப்படுகிறது.*

## உயர்ந்த இடத்திற்கு அப்பாலும். . .

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், 2015ஆம் ஆண்டில், குஜராத் மாநிலம் வடோதரா மாவட்டம் ஜாஸ்பூரிலுள்ள இந்த உயர்தொடக்கப் பள்ளியில் தலைமையாசிரியராக நான் பொறுப்பேற்றபொழுது கட்டுப்பாடின்மை, தூய்மையின்மை, ஒழுங்கின்மை ஆகியன உள்ளிட்ட பல்வேறு வெல்விளிகளை (Challenges) நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவற்றோடு போராடிக்கொண்டிருந்தபொழுதுதான் டிம் டிம் தாரா திட்டத்தைப் பற்றி அறிந்தேன். அத்திட்டதை நான் செயற்படுத்த விரும்பினேன். ஆனால், சில சிக்கல்களாலும் பள்ளியைப் புதுப்பிக்கும் வேலை நடந்துகொண்டிருந்தாலும் அதனை உடனடியாக என்னால் செயற்படுத்த முடியவில்லை.



எட்டாம் வகுப்பு மாணவர்களோடு தலைமையாசிரியர் பூமிகா தவல்

2016ஆம் ஆண்டில், அபராஜிதா அறக்கட்டளையினரின் ஊக்குவிப்பால், அத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்தேன், அவரும் ஆர்வத்தோடு செயல்பட்டார்; ஆனால் ஐந்து வகுப்புகளுக்கும் அவரே கற்பிக்கவேண்டிய பணிச்சுமை ஏற்பட்டதால் இத்திட்டத்தை அவரால் செயல்படுத்த முடியவில்லை. இச்சிக்கலை அபராஜிதா அறக்கட்டளையினரிடம் பகிர்ந்துகொண்டபொழுது, அவர்கள் ஒப்பானவர் கற்றல் (Peer Learning) என்னும் முறையைப்பற்றித் தெரிவித்தனர். அதன்படி இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொறுப்பை தீசா, பரி, மிட்டல், பிரடிக் ஆகிய நான்கு மாணவர்களைக்கொண்ட அணியிடம் ஒப்படைத்தேன். அவர்கள் உற்சாகத்தோடு கற்பிக்கிறார்கள்; பிற மாணவர்கள் நன்கு வரவேற்கிறார்கள்; திட்டம் தடையில்லாமல் செயற்படுத்தப்படுகிறது.

இதன் விளைவாக மாணவர்களிடம், குறிப்பாக கற்பிக்கும் அணியினரிடம், உடன்பாட்டு மாற்றங்கள் சிறப்பாக நிகழ்ந்திருக்கின்றன. அவர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாக மாறியிருக்கிறார்கள்; தலைமைத்துவப் பண்புகள் வளர்ந்திருக்கின்றன. ஒற்றுமை, உதவுதல்,

ஒத்துழைத்தல் ஆகியன அதிகரித்திருகின்றன. எட்டாம் வகுப்பு மாணவர்கள் முன்னர் மிகவும் குறும்புக்காரர்களாகவும் பெரியவர்களை மதிக்காதவர்களாகவும் இருந்தனர்; சுவர்களில் கிறுக்கிவைத்தனர். தற்பொழுது, அவர்கள் மிகவும் மாறியிருக்கிறார்கள்; பள்ளி நாடாளுமன்றத்தில் பலர் அமைச்சர்களாக இருக்கிறார்கள்; பெரியவர்களை மதிக்கிறார்கள்; உண்மையைப் பேசுகிறார்கள்; பிற வகுப்பில் பயிலும் மாணவர்களிடம் "தூய்மையாக இருங்கள்" எனக் கூறுவதற்கு முன்னர் தாங்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்று விரும்பி அங்ஙனம் இருக்க முயல்கிறார்கள்.

இவர்கள் தங்களது படிப்பறிவால் பெறப்போகும் பட்டம், அவர்களை ஓர் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லும்; ஆனால் அவர்கள் பெற்றிருக்கும் வாழ்க்கைத்திறன் கல்வி, இவர்களை அவ்விடத்திற்கு அப்பாலும் அழைத்துச்செல்லும் என நம்புகிறேன்.

*- பூமிகா தவல்*
*தலைமையாசிரியர்*

## தொலைத்தவையும் கண்டுபிடித்தவையும்

குஜராத் மாநிலம் அகமாதபாத் மாவட்ட ரத்தன்புராவிலுள்ள தொடக்கப்பள்ளியில் டிம் டிம் தாரா பாடங்களைக் கற்பிக்கும் பொறுப்பினை ஏற்றிருக்கிறேன். நான் அதனை நிறைவேற்ற முயன்றபொழுதுதான், பள்ளியின் கணினி செயல்படவில்லை என்பதை அறிந்தேன். ஆனால், இத்திட்டத்தை குழந்தைகளுக்குக் கற்பித்தே ஆகவேண்டுமென விரும்பினேன். எனவே எனது சொந்த மடிக்கணினியை பள்ளிக்குக் கொணர்ந்து டிம் டிம் தாரா பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கினேன்.

அத்திரைப்பாடங்களைப் பார்த்த பின்னர் மாணவர்களின் நடத்தைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, மாவட்ட ஊராட்சியால் (Zilla panchayat) ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் "தொலைந்தவையும் கண்டுபிடித்தவையும்" என எழுதப்பட்ட பெட்டி ஒன்று வழக்கப்பட்டு இருக்கிறது. அப்பெட்டி பள்ளியில் அனைவரும் புழங்கும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும். மாணவர்கள் பள்ளி வளாகத்தில் தாம் கண்டெடுத்த பொருள்களை அதற்குள் போட்டுவிடுவர். தமது பொருளைத் தொலைத்தவர்கள் அப்பெட்டிக்குள் கிடக்கும் பொருள்களில் தேடி தமக்கானதை எடுத்துகொள்வர், இப்பெட்டி எங்களது பள்ளியிலும் இருக்கிறது. ஆனால், பெரும்பாலும் பல மாதங்களாக எந்தப் பொருளும் போடப்படுவதில்லை; பொருள்களோ காணாமற்போய்க்கொண்டுதான் இருந்தன. இந்நிலையில், டிம் டிம் தாரா வகுப்பில் 'மற்றவர்களின் உடைமைகளை மதித்துப் பழகுக" என்னும் திரைப்பாடம் கற்பிக்கப்பட்டது. அதன் பின்னர், மெல்ல மெல்ல அந்த "தொலைந்தவையும் கண்டுபிடித்தவையும்" பெட்டியில் வைக்கப்படும் பொருள்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கிறது. எனவே யாரேனும் கவனக்குறைவால் தனது பொருள் தொலைந்துபோனால் இப்பொழுது பதட்டமடைவதில்லை; தான் தொலைத்த பொருளை அப்பெட்டியில் தேடி எடுத்துக்கொள்கிறார்கள்,



*- ஜகதீஷ்பாய்*
*ஆசிரியர்*

## நடத்தை, ஆளுமை மாற்றத்தின் தூண்டுகோல்

குஜராத் மாநிலம், அகமதாபாத் மாவட்டத்தில் தாண்டுகாவில் அமைந்துள்ள பெண்கள் உயர்தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே பொதுவாக காலங்கடந்து வகுப்புக்கு வருதல், தங்களது வேலையைக்கூட அடுத்தவர்களிடம் தள்ளிவிடுதல், மேடை அச்சம், தங்களுக்கு வழங்கப்படும் நண்பகல் உணவையும் நீரையும் வீணாக்குதல், தங்களது உடைமைகளைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளாமை, பள்ளி முடிந்ததும் விளக்குகளையும் மின்விசிறிகளையும் அணைக்காமை, வகுப்பறைக் கதவுகளை அடைக்காமை ஆகியன போன்ற பழக்கங்கள் மாணவர்களிடையே இருந்தன. அவற்றை மாற்றிக்கொள்ளும்படி அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்திவந்தோம்; ஆனாலும் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படவில்லை.

இந்நிலையில்தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டிம் டிம் தாரா இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திரைப்பாடங்களை தொடர்ந்து கற்பித்தோம். மாணவர்களின் மனநிலையில் மெல்ல மெல்ல மாற்றங்கள் ஏற்பட்டு, அவை அவர்களது நடத்தைகளாக வெளிப்படத் தொடங்கின. அவற்றின் விளைவாக, இப்பொழுது மாணவர்கள் பள்ளிக்கு உரிய நேரத்திற்கு வந்து பள்ளிப் பேரவைக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்கின்றனர்; தங்களது உணவை பகிர்ந்துகொள்கின்றனர்; மற்றவர்களுக்கு உதவத் தொடங்கி உள்ளனர். மாணவர்களிடையே தன்னம்பிக்கை பெருகியிருக்கிறது. அதன் விளைவாக பாராளுமன்றத் தேர்தலில் உற்சாகமாக பங்கேற்றனர்; அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொறுப்போடு செயல்படுகின்றனர். மேடை அச்சம் விலகியிருக்கிறது. இங்ஙனம் எமது பள்ளி மாணவர்களின் நடத்தை மாற்றத்திற்கும் ஆளுமை மேம்பாட்டிற்கும் டிம் டிம் தாரா தூண்டுகோலாக இருக்கிறது.



*- அசோக்குமார் என் ஷாபாடியா*
*தலைமையாசிரியர்*

## கற்றதும் பெற்றதும்

அகமதாபாத்தில் வஸ்தரபூர் பகுதியிலுள்ள அரசு உயர்தொடக்கப்பள்ளியில் 8ஆம் வகுப்பு பயிலும் தமோர் உர்விஸ் பஞ்சிபாய், டிம் டிம் தாராவின் வீணாக்காதிருக்கப் பழகுக பாடத்தால் மிகவும் ஈர்க்கப்பட்டார். அப்பாடத்தில் வரும் மாணவரைப் போல வீணாதலைத் தவிர்க்க தானும் ஏதேனும் செய்ய வேண்டும் என விரும்பினார். அப்பொழுது அவரது பள்ளியின் நீர்த்தொட்டியில் ஏற்பட்டுள்ள கசிவால் நீர் தரையில் பெருகி குட்டைபோல் தேங்கிநிற்பது அவரின் கவனத்தை ஈர்த்தது. தன் நண்பர்களின் உதவியோடு நீர்தேங்கும் அவ்விடத்திலிருந்து பள்ளித்தோட்டம் வரை கால்வாய் வெட்டி வீணாகும் நீரை அங்குள்ள செடிகளுக்கு தானாகவே பாயுமாறு செய்திருக்கிறார்.



தமோர் உர்விஸ் பஞ்சிபாய்

*- மயூரி*
*வடோதரா*

# சுவடுகள்

*(2017 சூலை முதல் செப்டம்பர் வரையிலான நிகழ்ச்சிகள்)*

## ஹரியானா அரசோடு புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஹரியானா மாநிலத்தில் டிம் டிம் தாரே திட்டத்தைச் செயற்படுத்த அம்மாநில பள்ளிக்கல்வி இயக்குநர் திருமிகு இராஜீவ் ரத்தன் அவர்களின் முயற்சியால் ஹரியானா அரசிற்கும் அபராஜிதா அறக்கட்டளைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 செப்டம்பர் 2ஆம் நாள் கையெழுத்தானது, இவ்வொப்பந்தத்தில் இக்கல்வியாண்டில் 14000 அரசு பள்ளிகளிலும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை வாரத்திற்கு ஒரு பாடவேளை ஒதுக்கப்பட்டு டிம் டிம் தாரே கற்பிக்கப்படும். இதன் செயற்பாட்டை அரசின் சார்பில் முதன்மைக் கல்வி அலுவலரும் மாவட்ட கல்வி அலுவரும் அபராஜிதா அறக்கட்டளையினரும் இணைந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்வர். அடுத்துவரும் ஆண்டுகளில் புதிய பள்ளிகளுக்கு இத்திட்டம் விரிவாக்கப்படும் என கூறப்பட்டிருக்கிறது.

## இராஜஸ்தான் மாநிலத்தில். . .




இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள விவேகானந்தர் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆதர்ஷ் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிகளிலும் டிம் டிம் தாரே (தளிர்த் திறன் திட்டத்தின் இந்திவடிவம்) திட்டத்தைச் செயற்படுத்த கடந்த கல்வியாண்டிலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வாழ்க்கைத்திறன் கல்வி பற்றியும் டிம் டிம் தாரே பற்றியும் ஒருநாள் பயிலரங்குங்கள் டோங்க், சிராகி, அஜ்மீர், உதய்பூர், அல்வார், சித்தரகர், தோல்பூர், பில்வாரா, சிகார், துங்கர்பூர் ஆகிய மாவட்டங்களில் 2017 ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடைபெற்றன. இப்பயிலரங்குகளின் வழியாக 1268 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப் பட்டிருக்கின்றனர்.

## அனைவருக்கும் கல்வித் திட்ட உண்டுறைவிடப் பள்ளியில் . . .



அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் குஜராத் மாநிலத்தின் பல பகுதிகளில் "கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா" என்னும் பெயரில் செயற்படும் 43 உண்டு உறைவிடப் பள்ளிகளில் டிம் டிம் தாரா திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்பணியின் முதற்கட்டமாக, அந்த 43 பள்ளிகளில் பணியாற்றும் 86 ஆசிரியர்களுக்கும் விடுதிக்காப்பாளர்களுக்கும் 31 மாணவபயிற்றுநர்களுக்கும் 23-08-2017ஆம் நாள் காந்திநகரில் - மாநில உதவித் திட்ட இயக்குநர் திருமிகு ஜெயஸ்ரீ தேவாங்கன், பெண்கல்வி அலுவலர் திருமிகு தர்சனாபென் சுதர் ஆகியோர் முன்னிலையில் - வாழ்க்கைத்திறன் கல்வி பற்றியும் டிம் டிம் தாரா பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் . . .



சமூகம், கல்வி ஆகியவற்றில் அக்கறையுள்ளோர் தளிர்த் திறன் திட்டத்தை பல்வேறு பள்ளிகளுக்கு அறிமுகம் செய்கின்றனர். அவ்வகையில் தமிழ்நாட்டில் கொடைகானலிலுள்ள அரசு உதவிபெறும் பள்ளிகள் சிலவற்றிற்கு அங்கு வாழும் திருமிகு ஜாரின் பாபு இத்திட்டத்தை அறிமுகம் செய்தார். அதன் விளைவாக தூய வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூய சவேரியர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பிரசன்டேசன் கான்வென்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் ஆகஸ்ட் 04, 27ஆம் நாள்களில் ஆசிரியர் பயிற்சியும் மாதிரி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

# எதிரொலிகள்

தன்னாய்வையும் சிந்திக்கும் வழிமுறையையும் வளர்த்தெடுக்கும்விதமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் செயற்பாடுகள் ஆர்வத்தைத் தூண்டுவனவாக இருக்கின்றன.

**- *அனுராதா வித்யாசங்கர்***
*தலைவர் - தென்மண்டல வள நடுவம்*
*சைல்டுலைன் இந்தியா ஃபவுண்டேசன், சென்னை.*

கற்போர் மையநீரோட்டத்தில் உதவி தேவைப்படுவோரை இணைத்து அவருக்கு கற்கும்தாகத்தை உருவாக்கும் பணியில் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் என்பதைப் படிக்கும்பொழுது மிகவும் நிம்மதியாக உணர்ந்தேன்.

**- *என்.ஏ. நாராயணன்***
*மனிதவள ஆலோசகர், மதுரை.*

வெற்றியின் விதைகள் இந்தியா முழுவதும் பரவட்டும். வாழ்த்துகள்!

***- மொ. பாண்டியராஜன்***
*தாளாளர்,*
*சம்பக் பள்ளி, மதுரை.*

மிகவும் வண்ணமயமான, ஆர்வத்தைத் தூண்டும் செய்திமடல். அணியினருக்குப் பாராட்டுகள்.

***- பிம்லா***
*செயலாளர்,*
*ஏக்தா பெண்கள் வள நடுவம், மதுரை.*

இளைய தலைமுறைக்கு தாங்கள் ஆற்றும் தொண்டு அளப்பரியது. வாழ்க!

***-ந. தங்கபாண்டியன்***
*தலைவர்*
*பார்ம் இந்தியா, திருச்சி.*

வித்யாதான் சோதனை புதுமையானதாகவும் வியப்பூட்டுவதாகவும் இருக்கிறது.

***- முனைவர் எஸ். இராதாகிருஷ்ணா***
*ஐத்திராபாத்*

அருமை

***- பா. ரெங்கராஜ்***
*ஆசிரியர்*
*ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காஞ்சிரங்கல்.*